# T20 Current Affairs

## for

# TNPSC

# Apr - 2022

Towards Your Success


**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs**

## Table of Contents


தமிழக நிகழ்வுகள் ....3
இந்திய நிகழ்வுகள் ....7
திருவிழா ....10
பொருளாதாரம் ....11
உலக நிகழ்வுகள் ....11
அறிவியல் & தொழில்நுட்பம் ....12
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....12
திட்டம் ....13
மாநாடுகள் ....13
பாதுகாப்பு ....13
கூட்டுப்பயிற்சி ....14
விருதுகள் ....14
விளையாட்டு நிகழ்வுகள் ....14
புத்தகம் ....15
முக்கிய தினம் ....15



**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

**http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T**




**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

❖ **காவல் உதவி செயலி**

- அவசரகாலத்தில் காவல்துறை உதவியை நாட குடிமக்களுக்கு இந்த செயலி உதவும் இந்த செயலி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கப்பட்டது.
- இந்த செயலியுடன் "டயல் 100" வசதியும் இணைக்கப்பட்டுள்ளது.

❖ **20 சிறந்த கைவினைஞர்களுக்கு மாநில அரசு விருதுகள்**

- கைவினை, கைத்திறத் தொழில்களில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய கலைஞர்களுக்கு விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

❖ **முல்லைப் பெரியாறு கண்காணிப்புக் குழு**

- முல்லைப் பெரியாறு கண்காணிப்புக் குழுவில் இடம்பெறவுள்ள தமிழகப் பிரதிநிதியின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. காவிரி தொழில்நுட்பக் குழுவின் தலைவர் ஆர்.சுப்பிரமணியன், தமிழகம் சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

❖ **முதல்வர் தலைமையில் மாநில காட்டுயிர் வாரியம்**

- முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வனத்துறை அமைச்சர், சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்பட 28 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில காட்டுயிர் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசின் வனத்தறை சார்பில் மாநில காட்டுயிர் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் இருப்பார். துணைத் தலைவராக வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் செயல்படுவார்.

❖ **“சமபந்தி போஜனம்“ சமத்துவ விருந்தாக பெயர் மாற்றம்**

- ‘சமபந்தி போஜனம்“ என்பது சமத்துவ விருந்தாக பெயர் மாற்றம் செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

❖ **அம்பேத்கர் பிறந்த தினம் சமத்துவ நாளாகக் கொண்டாட்டம்**

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, மாநில அளவிலான உயர்நிலை கண்காணிப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பெரியார் பிறந்த தினத்தை சமூகநீதி நாளாக அறிவித்தது போன்று, சட்ட மேதை அம்பேத்கர் பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் தேதியை சமத்துவ நாளாகக் கொண்டாட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.
- இந்தக் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 14-ஆம் தேதி இனி, சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும். தமிழகம் முழுவதும் சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை: இந்தியாவின் சிறந்த மருத்துவமனையாகத் தேர்வு**
  - இந்தியாவின் சிறந்த குழந்தைகள் நல மருத்துவமனையாக காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனையின் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் சிகிச்சை கட்டமைப்பு ஆகியவை சிறப்பாக இருப்பதற்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- **நம் மருத்துவமனை மகத்தான மருத்துவமனை திட்டம்**
  - நம் மருத்துவமனை மகத்தான மருத்துவமனை திட்டத்தின் கீழ், தமிழகத்தில் ஒரே நாளில் 91,538 கிலோ மருத்துவக்கழிவுகள் அகற்றப்பட்டன.
- **வளர்ப்பு பிராணிகளுக்கு வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்**
  - வள்ளலாரின் 200-வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, தமிழகத்தில் ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கு உதவ வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் எனும் புதிய திட்டம் தொடங்கப்படும் என்று மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.
  - நாட்டுக்கோழி இனப்பெருக்க பண்ணை: சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நாட்டுக்கோழி இனப்பெருக்க பண்ணை, கோழிக்குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ஆகியவை நிறுவப்படும்.
  - நாட்டின நாய்கள் ஆராய்ச்சி மையம்: தமிழகத்தில் உள்ள ராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை, கோம்பை போன்ற நாட்டின நாய்களுக்கான இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் ரூ.1 கோடி செலவில் தென்காசி மாவட்டத்தில் நிறுவப்படும்.
- **உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு: தமிழகத்திற்கு தேர்வு மூன்று விருதுகள்**
  - சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் (ICID-International Commission On Irrigation And Drainage), ஒவ்வொரு ஆண்டும் உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் மற்றும் நீர் சேமிப்பு விருதுகளை வழங்கி வருகிறது.
  - உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்புகளுக்கான விருதுக்கு கல்லணை, வீராணம் ஏரி, காளிங்கராயன் அணைக்கட்டு ஆகிய 3 கட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - இந்திய தேசிய நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் குழுமம் (INCID - Indian National Committee on Irrigation and Drainage) நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து இதற்கான பரிந்துரையை அனுப்புகிறது. அதன்படி 2021ஆம் ஆண்டு ஜூலையில், தமிழ்நாடு நீர்வளத்துறை சார்பில் கல்லணை, காளிங்கராயன் அணைக்கட்டு, வீராணம் நீர்த்தேக்கம், பேச்சிப்பாறை அணை, மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய 6 நீர்த்தேக்கக் கட்டமைப்புகளை பரிந்துரைக்கப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- கல்லணை (Kallanai Dam): வரலாற்று சிறப்பு மிக்க கல்லணை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சோழ மன்னன் கரிகாலனால் (Karikala Cholan) காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட ஒரு பழமையான அணையாகும்.
- வீராணம் ஏரி (Veeranam Lake): கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் நீர்த்தேக்கம் 9ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தக சோழன் (Parantaka I) காலத்தில் உருவாக்கப்பட்டது.
- பவானி ஆற்றின் குறுக்கே "காளிங்கராயன் அணைக்கட்டு" சுமார் 740 ஆண்டுகளுக்கு முன்பு கொங்கு மன்னரான காளிங்கராயன் கவுண்டர் என்பவரால் கட்டப்பட்ட பழமையான அணையாகும்.

❖ **தமிழகத்தின் முதல் வணிக வழக்குகள் நீதிமன்றம்**

- தமிழகத்தில் முதல் முதலாக சென்னை எழும்பூரில் உருவாக்கப்பட்ட வணிக வழக்குகள் நீதிமன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- இந்தப் புதிய நீதிமன்றத்தின் முதல் நீதிபதியாக எல்.எஸ்.சத்தியமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா

❖ **சென்னைக்கு மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி 2020 விருதுகள்**

- நீர்நிலைகள் சீரமைப்பு, கரோனா தடுப்புக்கான உள்கட்டமைப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கியதற்காக மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி 2020 என்ற தலைப்பில் இரண்டு விருதுகளை பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுள்ளது.

❖ **ஏப்ரல் 24-இல் கிராம சபைக் கூட்டம்**

- தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தையொட்டி, தமிழகம் முழுவதும் வருகிற 24-ஆம் தேதி கிராம சபைக் கூட்டங்களை நடத்துமாறு, மாவட்ட ஆட்சியர்களுக்கு மாநில அரசு உத்தரவிட்டது.

❖ **ஆண்டுக்கு 6 கிராம சபைக் கூட்டம்**

- தமிழகத்தில் இனி ஆண்டுக்கு நான்கு கிராம சபைக் கூட்டங்களுக்குப் பதிலாக ஆறு கூட்டங்கள் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், ஊராட்சிப் பிரதிநிதிகளின் அமர்வுப்படி உயர்த்தப்படுவதாக அவர் அறிவித்தார்.
- அதன்படி, ஜனவரி 26- குடியரசு தினம், மே -1 தொழிலாளர் தினம், ஆகஸ்ட் -15 சுதந்திர தினம், அக்டோபர் – 2 காந்தியடிகள் பிறந்த தினம், மார்ச்-22 உலக தண்ணீர் தினம், நவம்பர் – 1 உள்ளாட்சி தினம் ஆகிய தேதிகளில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்.

❖ **மலேரியா தடுப்பு நடவடிக்கைகள்: தமிழகத்துக்கு தேசிய விருது**

- மலேரியா தடுப்பு நடவடிக்கைகளை சிறப்புற மேற்கொண்டதற்காக தமிழகத்துக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கலைத் துறை வித்தகர் விருது**
  - திரைத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு கருணாநிதி பெயரில் கலைத் துறை வித்தகர் விருது வழங்கப்படும் என்று செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்.
- **சித்த மருத்துவ பல்கலைகழகத்தின் வேந்தராக முதல்வர்**
  - தமிழகத்தில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான சட்ட மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டது. பல்கலைக்கழகத்தின் வேந்தராக மாநிலத்தின் முதல்வர் செயல்படும் வகையில் இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- **பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**
  - பிரதமரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2021-22-ஆம் ஆண்டில் தமிழகத்துக்கு ரூ.440 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- **மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம்: ரூ.949.11 கோடி ஒதுக்கீடு**
  - 2021-22-ஆம் நிதியாண்டில் தமிழகத்துக்கான மனிதசக்தி நாள்கள் என்பது 27.20 கோடியில் இருந்து 31.14 கோடியாக அதிகரித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. ஊரக வேலை உ உறுதித் திட்டத்தில் நிர்வாகச் செலவுகளை மத்திய அரசானது முற்றிலும் ஏற்றுக் கொண்டுள்ளது.
  - மேலும், பணியாளர்களுக்கான ஊதியத் தொகையில் மத்திய அரசானது 75 சதவீதத்தையும், மாநில அரசு 25 சதவீதத்தையும் பகிர்ந்து கொள்கின்றன.
  - MNREGS- 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று இயற்றப்பட்டது.
  - 2009-ம் ஆண்டில் மகாத்மா காந்தி எனும் சொல் இச்சட்டத்தின் முன்னொட்டாக இணைக்கப்பட்டது.
- **புதுச்சேரி பல்கலைகழகத்திற்கு பசுமை விருது**
  - புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு மாவட்ட பசுமை சாம்பியன் விருதை மத்திய அரசு அண்மையில் வழங்கி அங்கீகரித்துள்ளது.
- **TNSMART செயலி**
  - TNSMART செயலி மூலம் மின்னல் தொடர்பான எச்சரிக்கை செய்திகளை அனுப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிலையினை கண்காணித்து தகவல் அளிக்கை வசதியையும் அந்தச் செயலியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஜூன் முதல் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- **'உள்தணிக்கை' (Internal Audit) திட்டம்**
  - நெடுஞ்சாலைத் துறையில் குறைபாடுகளை களைய “உள்தணிக்கை” என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையிலான குழு ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் வாரத்தில், உள்தணிக்கை



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

செய்து அறிக்கையை நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநருக்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

- **அறிவு வேட்கைக்¬கான திறவுகோல் புத்தகங்கள்**
  - அறிவு வேட்கைக்கான திறவுகோல் புத்தகங்களே என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். சர்வதேச புத்தக தினம் ஏப்ரல் 23.
- **நம்மாழ்வார் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையம்**
  - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில் புதிய தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- **ஃபீல்டு மார்ஷல் சாம் மானெக்ஷா பிறந்த தினம்**
  - மறைந்த ஃபீல்டு மார்ஷல் சாம் மானெக்ஷாவின் 108 – வது பிறந்த தினம் உதகையில் கடைப்பிடிக்கப்பட்டது.
  - 1971-ம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் போரில் இந்திய இராணுவத்தின் தலைமை பொறுப்பை வகித்து வெற்றி தேடி தந்தவர்.

## இந்திய நிகழ்வுகள்

- **‘ஏப்ரல் 25-ந் தேதி ‘உலக மலேரியா தினம்’**
  - "மலேரியா நோயை 2030-க்குள் நாட்டிலிருந்து முற்றிலும் ஒழிப்பதற்கான நமது இலக்கை அடையவும், மலேரியாவுக்கு எதிரான கூட்டு நடவடிக்கையில், நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளிப்பது மட்டுமின்றி தனிநபர் என்ற முறையிலும் நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்திலும் தூய்மையை பராமரிப்பதும், மலேரியா கட்டுப்பாடு குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் சம முக்கியத்துவம் வாய்ந்தது. என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இதனைத் தெரிவித்தார்.
  - 2022-ம் ஆண்டின் மையக்கரு: "உலக அளவில் மலேரியா நோய் பாதிப்பு சுமையை குறைப்பதற்கான புதுமை கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளுதல் மற்றும் உயிர்களை காப்பாற்றுதல்".
- **இந்தியா - ஆஸ்திரேலியா இடையே பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம்**
  - மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் மற்றும் ஆஸ்திரேலிய அமைச்சர் திரு டான் டெஹான் ஆகியோர் கையெழுத்திட்டனர்.
  - இந்தியா-ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- பத்தாண்டுகளுக்கும் அதிகமான காலத்திற்குப் பிறகு வளர்ந்த நாடு ஒன்றுடனான இந்தியாவின் முதல் வர்த்தக ஒப்பந்தம் இந்தியா-ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் ஆகும்.
- இரு நட்பு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு பொருளாதார மற்றும் வணிக உறவுகளின் முழு அளவிலான ஒத்துழைப்பை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தம், பொருட்களின் வர்த்தகம், ஆதார விதிகள், சேவைகள் வர்த்தகம், வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப எல்லைகள், சுகாதாரம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது ஆகும்.
- தகராறு தீர்வு, தொலைத்தொடர்பு, சுங்க நடைமுறைகள், மருந்து பொருட்கள் மற்றும் பிற பகுதிகளில் ஒத்துழைப்பு உள்ளிட்டவையும் இதில் அடங்கும்.
- இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய 8 வெவ்வேறு துறை சார்ந்த கடிதங்களும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக நிறைவு செய்யப்பட்டன.
- இந்தியாவின் ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள் ஆபரணங்கள் உள்ளிட்ட 6000 பொருள்கள் வரி இல்லாமல் ஏற்றுமதி செய்யலாம்.

❖ **நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா இந்தியா வருகை வந்தார்**

- பீகாரின் ஜெய்நகரை நேபாளத்தின் குர்தா பகுதியுடன் இணைக்கும் முதல் அகல ரெயில் பாதையை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா ஆகியோர் காணொளி வாயிலாக தொடங்கி வைத்தனர்.
- மேலும், மின் விநியோகத் திட்டம் இந்தியாவின் ரூபே அட்டையை நேபாளத்தில் பயன்படுத்துவதற்கான வசதி தொடக்கி வைக்கப்பட்டன.
- நேபாளம் சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரபிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுடன் 1850 கிமீ எல்லையை பகிர்ந்து கொள்கிறது.

❖ **முதன்முறையாக இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் துர்க்மெனிஸ்தான் பயணம்**

- இந்தியாவின் நிதி நுண்ணறிவுப் பிரிவு, துர்க்மெனிஸ்தானின் நிதிக் கண்காணிப்புச் சேவை ஆகியவற்றுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியா – துர்க்மெனிஸ்தான் இடையே தூதரக உறவு தொடங்கி 30 ஆண்டு நிறைவடைந்துள்ளது.
- துர்க்மெனிஸ்தான் அதிபர் செர்தார் பெர்டிமுஹாமிதோவ்

❖ **உயர்நீதிமன்றங்களில் ஓராண்டில் 27 பெண் நீதிபதிகள் நியமனம்**

- கடந்த 2021 ஜனவரி 1 - ஆம் தேதி முதல் கடந்த மார்ச் 30-ஆம் தேதிவரை 39 பெண்களை உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் செய்ய உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்தது குறிப்பிடத்தக்கது.
- உச்சநீதிமன்றத்தில் நிர்ணயிக்கப்பட்ட நீதிபதிகள் பணியிடம் 34. தற்போது 32 நீதிபதிகள் பணியில் உள்ளனர்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- உச்சநீதிமன்ற சட்டம் 1956-ன் கீழ் மொத்த நீதிபதிளின் எண்ணிக்கை 10 ஆகும்.
- ஆகஸ்ட் 9, 2019 முதல் உச்சநீதிமன்ற நீதிபதிளின் எண்ணிக்கை (33+CJI) =34 ஆக உயர்த்தப்பட்டது.
- இந்தியாவில் மொத்தம் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளது.

❖ **சண்டிகரை பஞ்சாபிற்கு மாற்ற, சட்டசபையில் தீர்மானம்**

- சண்டிகரை பஞ்சாப்புடன் இணைக்கும்படி வலியுறுத்தி, பஞ்சாப் சட்டபேரவை சிறப்பு கூட்டத்தில் முதலவர் பகவந்த் மான் அதிரடியாக தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்.
- 1966-ம் ஆண்டு பஞ்சாப்பில் இருந்த இந்தி பேசும் பகுதிகளை பிரித்து அரியானா மாநிலம் உருவாக்கப்பட்டது. அப்போது முதல் பஞ்சாப், அரியானாவின் கூட்டுத் தலைநகரமாக சண்டிகர் செயல்பட்டு வருகிறது.

❖ **ஜம்மு-காஷ்மீர்: தொகுதி மறுசீரமைப்பு குழு**

- ஜம்மு-காஷ்மீர் கடந்த 2019-ம் ஆண்டு யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அங்குள்ள நாடாளுமன்ற, சட்டப் பேரவைத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய 2020-ஆம் ஆண்டு மே 6-ம் தேதி உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஜம்மு-காஷ்மீரில் கள ஆய்வு மேற்கொண்டு வெளியிட்டுள்ளது.
- அதன்படி, ஜம்முவில் 6, காஷ்மீரில் ஒன்று என சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 83-ல் இருந்து 90-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

❖ **நாடாளுமன்றத்தில் கணக்கு தணிக்கையாளர் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றம்**

- கணக்குத் தணிக்கையாளர் சட்டம்-1949, செலவு மற்றும் பணிகள் கணக்காளர் சட்டம்-1959 மற்றும் கம்பெனி செயலர்கள் சட்டம்-1980 ஆகியவற்றில் சில திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இந்திய கணக்கு தணிக்கையாளர் நிறுவனம் (ஐசிஏஐ), இந்திய செலவு மற்றும் பணிகள் கணக்காளர் நிறுவனம் (ஐசிடபிள்யூஏஐ) மற்றும் இந்திய கம்பெனி செயலாளர்கள் நிறுவனம் (ஐசிஎஸ்ஐ) ஆகியவற்றின் ஒழுங்கு நடவடிக்கை குழுக்களின் தலைமை அதிகாரியாக முறையே கணக்குத் தணிக்கையாளர் அல்லாத, செலவுக் கணக்காளர் அல்லாத மற்றும் கம்பெனி செயலர் அல்லாத நபர்களை நியமனம் செய்யும் வகையில் மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

❖ **பேரழிவு ஆயுதங்களுக்கு நிதியுதவி செய்வதைத் தடுக்கும் மசோதா**

- பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு நிதியுதவி வழங்குவதைத் தடை செய்யும் சட்டத்திருத்தமசோதா, மக்களவையில் நிறைவேறியது.
- பேரழிவு ஆயுதங்கள் (சட்ட விரோதச் செயல்கள்) சட்டம், கடந்த 2005-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அந்த சட்டத்தில், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு மட்டுமே தடை



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

விதிக்கப்பட்டுள்ளது. அதில், சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மக்களவையில் அந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.

- இந்த மசோதாவின் மூலம், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு நிதியுதவி செய்பவர்களின் சொத்துகளை முடக்கவும் பறிமுதல் செய்யவும் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

❖ **இந்திய வாழைப்பழம், இளஞ்சோளம் கனடாவுக்கு ஏற்றுமதி**

- இந்திய வாழைப்பழம், இளம் மக்காச்சோளம் (பேபி கார்ன்) ஆகியவை கனடா நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கான தேவையான தகவல்களை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டு ஏற்றுமதிக்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக மத்திய வேளாண், விவசாயிகள் நலத்துறை தெரிவித்துள்ளது.

❖ **எரிசக்தி, பருவநிலை தரவரிசை பட்டியல்**

- எரிசக்தி, பருவநிலை குறியீடுகளில் மாநிலங்களின் செயல்பாடுகளில் ஒட்டுமொத்த தரவரிசையில் குஜராத், கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளதாக நீதி ஆயோக் அறிவித்துள்ளது.
- தமிழகம் 43.4 புள்ளிகளுடன் 9-வது இடத்தைப் பெற்றுள்ளது. அதே சமயத்தில் எரிசக்தி ஆற்றல் சேமிப்புப் பிரிவில் தமிழகம் 85.4 புள்ளிகள் பெற்று முதல் இடம் பெற்றுள்ளது.

❖ **பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம்**

- ஆண்டுக்கு ரூ.8.5 லட்சம் கோடி மதிப்புக்கு பால் உற்பத்தி செய்து, உலகிலேயே இந்தியா முதலிடத்தில் உள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

❖ **அஸ்ஸாம் பலாப்பழம் துபைக்கு ஏற்றுமதி**

- அஸ்ஸாம் மாநிலம் பலாப்பழ ஏற்றுமதியை துபைக்கு தொடங்கியுள்ளது. அஸ்ஸாம் மாநிலத்தில் விளைவிக்கப்படும் பலாப்பழம் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றுக்கு துபையில் வரவேற்பு அதிகமாக உள்ளது.

❖ **'ஷி' ஆட்டோ**

- பெண்கள் மற்றும் மாணவிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்தை வழங்கும் நோக்கத்துடன் ஆந்திர மாநில காவல் துறையால் 'ஷி' ஆட்டோ சித்தூரில் அறிமுகம் செய்யப்பட்டது.

## திருவிழா

❖ **கங்கௌர் திருவிழா**

- ராஜஸ்தான் மாநிலத்தின் முக்கியமான திருவிழாக்களில் கங்கௌர் திருவிழாவும் ஒன்று. இது மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மேற்கு வங்கத்திலும் கொண்டாடப்படுகிறது.

- **சர்ஹுல் பண்டிகை**
  - ஜார்கண்டில் கொண்டாடப்படும் சர்ஹுல் பண்டிகை புத்தாண்டு விழா ஆகும். சர்னா மதத்தை பின்பற்றும் ஜார்கண்ட் முண்டா, ஹோ மற்றும் ஓரான் பழங்குடி சமூகங்கள் இந்த பண்டிகையை கொண்டாடுகின்றன.

## பொருளாதாரம்

- **ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் கொள்முதல்**
  - ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்யும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
  - உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்ததன் காரணமாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பல ரஷியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் வர்த்தக உறவுகளைத் துண்டித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
- **இந்தியாவின் வேலையின்மை விகிதம்**
  - இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் (CMIE)
  - தரவுகளின்படி, இந்தியாவின் ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 7.6 சதவீதமாக உள்ளது.
  - இந்த தரவுகளின்படி, அதிக வேலையின்மை விகிதம் உள்ள மாநிலங்களில் ஹரியானா முதலிடத்திலும் ராஜஸ்தான் இரண்டாமிடத்திலும் உள்ளன.

## உலக நிகழ்வுகள்

- **இலங்கையில் அவசரநிலை பிரகடனம்**
  - இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.
- **ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து ரஷியா நீக்கம்**
  - உக்ரைனில் ரஷிய படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக புகார் எழுந்த நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரஷியாவுக்கு எதிராக ஐ.நா. பொதுச் சபையில் கொண்டுவரப்பட்ட இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்து நடுநிலை வகித்துள்ளது.
  - கடந்த 2006-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து நீக்கப்படும் இரண்டாவது நாடு ரஷியாவாகும். முன்னதாக, கடந்த 2011- ஆம் ஆண்டு இந்த அமைப்பிலிருந்து லிபியா நீக்கப்பட்டது.
- **பாகிஸ்தான் புதிய பிரதமர் ஷாபாஸ் ஷெரிஃப்**
  - பாகிஸ்தானின் 23-ஆவது பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவர் ஷாபாஸ் ஷெரீஃப் தேர்வு செய்யப்பட்டார்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# அறிவியல் & தொழில்நுட்பம்

❖ **“டாடா நியூ (TATA NEU)” சூப்பர் செயலி அறிமுகம்**

➢ டாடா குழுமம் இந்தியாவின் முதல் சூப்பர் செயலியான 'டாடா நியூ' வை அறிமுகப்படுத்தியது. · இது டாடா நிறுவனத்தின் அனைத்து சேவைகளையும் ஒரே பயன்பாட்டில் கொண்டு வருகிறது.

❖ **இஸ்ரோ - வில் இலவச ஆன்லைன் வகுப்பு**

➢ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) பேரிடர் மேலாண்மைத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் நிபுணர்களுக்காக SAR தரவு செயலாக்கம் (Date Processing) மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்த இலவச ஆன்லைன் வகுப்புகளை இஸ்ரோ அறிமுகம் செய்துள்ளது.

➢ இஸ்ரோ EOS செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்ட பின், அது தரும் தகவல்களை சேகரிப்பது, பயன்படுத்துவது குறித்த தகவல்களை தெரிந்து கொள்ளலாம் எனவும் இஸ்ரோ அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது.

❖ **SFDR பூஸ்டர் ஏவுகணை அமைப்பு வெற்றிகரமாக சாதனை**

➢ டிஆர்டிஓ அதிகாரிகள் கூறுகையில், “ஒடிஸா மாநிலம் பாலேசுவரம் மாவட்டம் சண்டிபூர் கடற்கரைப் பகுதியில், திடஎரிபொருள் நாள ரேம்ஜெட் (SFDR) பூஸ்டர் ஏவுகணை அமைப்பை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

# முக்கிய நபர்கள் & நியமனங்கள்

❖ **உலகின் முதல் சுதந்திர காலநிலை மாற்ற நிபுணர்**

➢ டாக்டர் இயன் ஃப்ரை, மனித உரிமைகள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான உலகின் முதல் சுதந்திர நிபுணர் ஆவார்.

➢ இவர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையால் நியமிக்கப்பட்டார்.

❖ **அமெரிக்க உச்சநீதிமன்றத்துக்கு முதல் கருப்பின பெண் நீதிபதி**

➢ அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக கருப்பினத்தைச் சேர்ந்த கேதன்ஜி பிரௌன் ஜாக்சனைநியமிக்க அந்நாட்டு நாடாளுமன்ற மேலவை ஒப்புதல் அளித்தது. அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் முதல் கருப்பின பெண் நீதிபதி என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

❖ **உடல் பருமன் அறுவை சிகிச்சை அமைப்பு: தலைவர் தேர்வு**

➢ இந்திய உடல் பருமன் அறுவை சிகிச்சை நிபுணர்கள் அமைப்பின் (ஒபிசிட்டி சர்ஜரி சொசைட்டி ஆஃப் இந்தியா) தலைவராக ஜெம் மருத்துவமனையின் மூத்த மருத்துவ நிபுணர் டாக்டர் பிரவீண் ராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ **நீதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் ராஜிநாமா**

➢ நீதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ்குமார் ராஜீவ் குமார் ராஜிநாமா செய்தார். இதையடுத்து, புதிய துணைத் தலைவராக சுமன் கே. பெரியை மத்திய அரசு நியமித்துள்ளது.

❖ **இந்திய ஹஜ் கமிட்டி தலைவராக ஏ.பி. அப்துல்லா குட்டி தேர்வு**



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இந்திய ஹஜ் கமிட்டி தலைவராக ஏ.பி. அப்துல்லா குட்டி தேர்வு செய்யப்பட்டுள்ளார். முதல் முறையாக இருபெண்கள் ஹஜ் கமிட்டி துணைத் தலைவர்களாகத் தேர்வாகியுள்ளனர்.

❖ **பரம் சக்தி சூப்பர் கம்ப்யூட்டர்**

- தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷனின் கீழ் உருவாக்கப்பட்ட சூப்பர் கம்ப்யூட்டர் கணக்கியல் மற்றும் தரவு அறிவியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளில் முன்னேற உதவுகிறது.

## திட்டம்

❖ **வினய சமரஸ்ய யோஜனா**

- ஏப்ரல் 14 அன்று, கர்நாடகாவில் வினய சமரஸ்ய யோஜனா அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது கிராம பஞ்சாயத்துகளில் சாதிய பாகுபாடுகளுக்கு எதிரான பொது விழிப்புணர்வு பிரச்சாரம் ஏற்படுத்தும் திட்டம் ஆகும் .

❖ **முக்ய மந்திரி பக்வானி பீமா யோஜனா**

- இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் இத்திட்டம் ஹரியானாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## மாநாடுகள்

❖ **இந்தியா-அமெரிக்கா 2+2 பேச்சுவார்த்தை**

- இந்தியா-அமெரிக்கா நாடுகளின் வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்கள் இடையேயான 4-வது 2+2 பேச்சுவார்த்தை, அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்றது.

## பாதுகாப்பு

❖ **இந்தியாவுக்கு எஸ்-400 ஏவுகணை சாதனம்**

- ரஷியாவிடம் இருந்து எஸ்-400 ரக வான் பாதுகாப்பு ஏவுகணை சாதனங்களின் 5 தொகுதிகளை வாங்குவதற்கு கடந்த 2018-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 பில்லியன் டாலர்கள் (ரூ.38,000 கோடி) மதிப்பிலான ஒப்பந்தத்தை இந்தியா இறுதி செய்தது.

❖ **புதிய ராணுவ தலைமைத் தளபதி மனோஜ் பாண்டே**

- இந்திய ராணுவப் படையின் 29-வது தலைமைத் தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **இந்தியா ராணுவ செலவினத்தை 0.9% அதிகரித்துள்ளது**

- ராணுவத்துக்கான செலவினத்தை 2021-ஆம் ஆண்டில் ரூ.5.86 லட்சம் கோடியாக இந்தியா அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.9 சதவீதம் கூடுதலாகும்.
- ராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கும் உலக நாடுகளில் இந்தியா மூன்றாமிடத்தில் உள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## கூட்டுப்பயிற்சி

❖ **காஞ்சர் 2022**

➢ இந்தியா மற்றும் கிர்கிஸ்தானுக்கு இடையிலான கூட்டு சிறப்புப் படைப் பயிற்சி ஹிமாச்சல பிரதேசத்தின் பக்லோவில் நடைபெற்றது.

## விருதுகள்

❖ **பொது நிர்வாகத்துக்கான பிரதமர் விருது: "உடான்" திட்டம் தேர்வு**

➢ தலைசிறந்த பொது நிர்வாகத்துக்கான பிரதமரின் விருதுக்கு விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் உடான் திட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

❖ **இந்தியர்களுக்கு கிராமி' விருது**

➢ 64-ஆவது கிராமி விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் வேகஸ் நகரில் நடைபெற்றது. அதில், 'டிவைன் டைட்ஸ்' என்ற பாடல் தொகுப்புக்காக பெங்களூரைச் சேர்ந்த ரிக்கிகெஜ், 'சிறந்த புதிய ஆல்பம்' என்ற பிரிவில் கிராமி விருதை வென்றார்.

➢ மும்பையில் பிறந்த பாடகியான ஃபால்குனி ஷா, 'சிறார்களுக்கான சிறந்த ஆல்பம்' என்ற பிரிவில், 'எகலர்ஃபுல் வேர்ல்டு' பாடலுக்காக கிராமி விருதைப் பெற்றார்.

❖ **சரஸ்வதி சம்மன் 2021 : ராம்தராஷ் மிஸ்ரா தேர்வு**

➢ பேராசிரியர் ராம்தராஷ் மிஸ்ராவின் கவிதைத் தொகுப்புகளான 'மெய் து யஹான் ஹூன்' க்காக மதிப்புமிக்க சரஸ்வதி சம்மன் விருது - 2021 அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **உலகக் கோப்பை கிரிக்கெட் முதல் முறையாக 5 பெண் நடுவர்கள்**

➢ உலகக் கோப்பை கிரிக்கெட் முதல் முறையாக, மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு 5 பெண் நடுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

➢ இக்குழுவில் ஜி.லட்சுமி என்ற இந்தியரும் இணைந்திருக்கிறார். மேலும் ஆடவருக்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் முதல் பெண் நடுவராக ஜி.லட்சுமி செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **மியாமி ஓபன் டென்னிஸ் வெற்றி பெற்றார் கார்ஃபியா**

➢ அமெரிக்காவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் கார்ஃபியா சாம்பியன் ஆனார். இது அந்த இளம் டென்னிஸ் வீரர் பெறும் முதல் பிரதான சாம்பியன் பட்டமாகும்.

❖ **FIFA 2022 சின்னம் வெளியீடு**

➢ நவம்பர் 21 முதல் டிசம்பர் 18 வரையில் FIFA கால்பந்து உலகக் கோப்பை கத்தார் நாட்டில் நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான சின்னத்தை (Mascot) வெளியிட்டுள்ளது FIFA.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## புத்தகம்

- **குயின் ஆப் பயர் - தேவிகா ரங்காச்சாரி**
  - இந்தப் புத்தகம் ராணி லட்சுமிபாயின் கதையை பற்றிக் குறிப்பிடுகிறது.
  - இது லட்சுமிபாயை ஒரு ராணி, சிப்பாய் மற்றும் அரசியல்வாதியாகவும் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக அவர் எவ்வாறு கிளர்ச்சி செய்தார் என்பதை மையமாகக் கொண்டுள்ளது.
- "பிர்சா முண்டா - ஜன்ஜாதியா நாயக்"
  - "பிர்சா முண்டா - ஜன்ஜாதியா நாயக்" என்ற புத்தகத்தை பேராசிரியர் அலோக் சக்ரவால் எழுதியுள்ளார்.
  - சுதந்திரப் போராட்டத்தில் பிர்சா முண்டாவின் போராட்டத்தையும், வனவாசிகளின் பங்களிப்பையும் இந்தப் புத்தகம் விவரிக்கிறது.
- **தி மேவரிக் எஃபெக்ட்**
  - 'தி மேவரிக் எஃபெக்ட்' என்ற புத்தகம் ஹரிஷ் மேத்தா என்பவரால் எழுதபட்டது.அவர் NASSCOM-ன் நிறுவன உறுப்பினர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவர் ஆவார்.

## முக்கிய தினம்

1. ஏப்ரல் 1 - ஒடிசா தினம்
2. ஏப்ரல் 2 - சர்வதேச குழந்தைகள் புத்தக தினம்
3. ஏப்ரல் 2 - உலக ஆட்டிசம் விழிப்புணர்வு தினம்
4. ஏப்ரல் 3 - இராணுவ மருத்துவப் படை நிறுவன தினம்
5. ஏப்ரல் 3 - சர்வதேச மனசாட்சி தினம்
6. ஏப்ரல் 5 - தேசிய கடல்சார் தினம்
7. ஏப்ரல் 6 - சர்வதேச வளர்ச்சி & அமைதிக்கான விளையாட்டுத் தினம்
8. ஏப்ரல் 7 - உலக சுகாதார தினம்
9. ஏப்ரல் 10 - உலக ஹோமியோபதி தினம்
10. ஏப்ரல் 11 - பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம்
11. ஏப்ரல் 14 - தீயணைப்போர் தியாகிகள் தினம்
12. ஏப்ரல் 16 - யானைகளைப் பாதுகாத்தல் தினம்
13. ஏப்ரல் 17 - உலக ஹீமோபிலியா தினம்
14. ஏப்ரல் 21 - தேசியக் குடிமைப் பணி தினம்
15. ஏப்ரல் 21 - உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம்
16. ஏப்ரல் 22 - உலகப் புவி தினம்
17. ஏப்ரல் 24 - தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம்
18. ஏப்ரல் 24 - சுரங்க விழிப்புணர்வு மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் உதவிக்கான சர்வதேச தினம்
19. ஏப்ரல் 24 முதல் 30 வரை உலக நோய்த் தடுப்பு வாரம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

20. ஏப்ரல் 25 - தேசிய டிஎன்ஏ தினம்
21. ஏப்ரல் 25 - உலக மலேரியா தினம்
22. ஏப்ரல் 26 - உலக அறிவுசார் சொத்து தினம்
23. ஏப்ரல் 30 உலக கால்நடை தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com